**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.130/2024**

**வழக்கு சாட்சி PW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜாமணி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : முருகசாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : பொருளூர் | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாணை

நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் உள்ள விபரங்கள் நான் சொன்னதன்பேரில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை நான் மறுக்க முடியாது என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை பத்தி 4–ல் சொல்லியுள்ள சங்கதிகள் எதற்காக சொல்லியுள்ளேன் என்றால் ? நான் சொல்லவில்லை. ஆனால், நான் சொல்லியுள்ள சங்கதிகள் வேறு. தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலம் என்னால் சொல்லி தயார் செய்யப்பட்டது அல்ல என்றால் ? பத்தி 4 யை தவிர மற்ற பத்திகளில் உள்ளது நான் சொன்னது தான். முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை நான் முழுவதும் படிக்காமல் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு, தற்போது மற்ற பத்திகளில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்று நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. நான் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான்

நம்பத்தகுந்த சாட்சியம் அல்ல என்றாலும் ? சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள பெயர், தொகை, தேதி போன்றவை யாரால் நிரப்பி கொடுக்கப்பட்டது என்றால் ? பிரதிவாதி ரிஷானாபானு என்பவரால் நிரப்பி கொடுக்கப்பட்டது. காசோலையில் உள்ள ராஜாமணி என்று எழுதப்பட்ட விபரமும், தொகை விபரமும், தேதி போன்றவைகள் ஒரு கையெழுத்தாலும், ரிஷானாபானு என்ற கையெழுத்திற்கும் மை வித்தியாசமும், கையெழுத்து வித்தியாசமும் உள்ளது என்றால் ? எனக்கு தெரியவில்லை. ராஜாமணி என்ற பெயரையும், தொகை விபரத்தையும், தேதியையும் ரிஷானாபானுவால் எழுதப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு நீதிமன்றம் மூலமாக கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி பரிசோதிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ? ஆட்சேபனை இல்லை. காசோலை திருப்பப்பட்ட தேதி 29.02.2024. காசோலை திருப்பப்பட்ட குறிப்பாணையில் 06.03.2024 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ? 2வது ஒரு முறை காசோலையில் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் முறை எந்த தேதியில் காசோலை தொகை வசூல் செய்ய தாக்கல் செய்தோம் என்றால் ? 28.02.2024. 2வது முறை எந்த தேதியில் காசோலை தொகை வசூல் செய்ய தாக்கல் செய்தோம் என்றால் ? 2வது முறை தாக்கல் செய்த தேதி மறந்துவிட்டேன். 2வது முறை காசோலையை வசூல் செய்ய தாக்கல் செய்த ஆவணங்களை, 2வது முறையாக காசோலை வசூலாகாமல் திருப்பப்பட்டதற்கான எந்தவொரு ஆவணத்தையும் நான் வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ? நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. 2வது முறை காசோலையினை தொகை வசூல் செய்ய வங்கியில் தாக்கல் செய்த விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நீதிமன்ற முதன்மை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். நான் காசோலைகளை இரண்டு முறை வசூல் செய்ய தாக்கல் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த வங்கில் காசோலையை வசூல் செய்ய தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பொருளூர் தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கியில்

தாக்கல் செய்துள்ளேன். இரண்டு முறை நான் தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த காசோலை தாக்கல் செய்யப்பட்டதற்கான செலுத்து சீட்டு சலான் எதையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் எனக்கு தெரிந்த ஏதோஒரு முக்கியமான சங்கதியை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் வங்கியில் காசோலை வசூல் செய்ய தாக்கல் செய்த செலுத்து சீட்டு சலான்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. பிரதிவாதி என்னை எந்தவொரு காலகட்டத்திலும் நேரடியாக அணுகவில்லை என்றாலும், எந்தவொரு தொகையும் என்னிடம் பெறவில்லை என்றாலும் ? சரியல்ல. வழக்கு காசோலையானது மறுபயனுக்கானது அல்ல என்று சொன்னால் ? சரியல்ல. தாவா காசோலையை நானாகவே நிரப்பி கொண்டேன் என்று சொன்னால் ? சரியல்ல. வழக்குரை, முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சில சங்கதிகளை மறைத்துள்ளதால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. தாவா காசோலைக்கும், இவ்வழக்கிற்கும், பிரதிவாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.07 13:10:11 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்